## கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 6 (சிம்சோன் தொடர்ச்சி)



இத்தியானத்தை வாசிப்பதற்கு முன்பாக, இதன் முந்திய பாகத்தை தியானிக்கும்படியாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தேவ தூதனானவர் மூலமாக, பிறப்பை பற்றியும், வாழவேண்டிய வாழ்க்கை தரத்தைப் பற்றியும், வாழ்க்கையை குறித்த தேவ திட்டம் என்பவென்பதையும், சிம்சோனின் பெற்றோருக்கு, அவர் பிறப்பதற்கு முன்பாகவே அறிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட தேவ திட்டத்தோடு பிறந்த அவர், தேவ ஆவியானவரின் நிரப்புதலையும், அதன்மூலம் தன் ஆவி, ஆத்துமாவில் மாத்திரமல்ல, தன் சரீரத்திலும் தேவ வல்லமையை உணர்ந்தபொழுதும், அற்ப சரீர இச்சைகளுக்காக, தன்னை குறித்த தேவ திட்டத்தை மறந்து வழி விலகி போனார். ஆயினும், ஆண்டவர் தம் கிருபையை அவருக்கு அளித்து, இஸ்ரவேலின் நியாயாதிபதியாய் இருந்து, பெலிஸ்தியரின் கைக்கு தம் மக்களான இஸ்ரவேல் மக்களை காத்து இரட்சிக்க வேண்டும் என்ற தேவ திட்டத்தை வெளிப்படுத்தி, அவரை நியாயாதியாய் வைத்தார். ஆனாலும் சிம்சோன் இவ்வாறாக தேவனுக்காக மோசேயை போல, யோசுவாவை போல தனக்கு கொடுக்கபட்டிருக்கும் மேன்மையான ஊழியத்தை செய்யாமல், மறுபடியும் மறுபடியும், மாம்ச இச்சையில் வீழ்ந்து, தேவ கிருபையை போக்கடித்து போட்டார். அவற்றில் சில காரியங்களை நாம் முந்தின பாகத்தில் **(பாகம் 5 இல்)** கண்டோம். தொடர்ந்து எவ்வாறாக

அவருடைய கீழ்படியாமை, இறுதியில் அவர் வாழ்க்கையை பரிதாபகரமாக முடிய செய்தது என்பதை இத்தியானத்தில் காண்போம்.

**நியாயாதிபதிகள் 15:20 இல் “அவன் பெலிஸ்தரின் நாட்களில் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்.“**, இவ்வாறாக அந்த அதிகாரத்தின் இறுதியில் கூறப்பட்டிருக்க, அடுத்த அதிகாரத்தின் முதல் வசனமே கூறுகிறது **“பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்.“ (நியாயாதிபதிகள் 16:1)** என்று. இது மிகவும் வேதனையான ஒன்றாகும். தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு, அதன் வல்லமையை தன் சரீரத்தில் உணர்கிற அவர், தன் சரீரத்தை கேட்டிற்கு ஒப்புக்கொடுத்தார். முதலாவது வெறும் கண்களின் இச்சையில் ஆரம்பித்த பலவீனம், இப்பொழுது அவரை முழுவதும் ஆட்கொண்டது. **நியாயாதிபதிகள் 16:4 கூறுகிறது “அதற்குப்பின்பு அவன் சோரேக் ஆற்றங்கரையில் இருக்கிற தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான்.“**. இது அவர் வாழ்வின் மிக மோசமான நிலையை காண்பிக்கிறது. இஸ்ரவேலின் நியாயதிபதியாய் இருக்கும் கிருபையை ஆண்டவர் தந்த பொழுதும், அவரோ கேடான வழியில் சென்று, தன் ஆவி, ஆத்மா, மற்றும் சரீரம் ஆகிய அனைத்தையும் கறை படுத்தினார். தேவத்திட்டம், தேவ உறவு ஆகிய இவைகளை விட்டு, வெறும் சரீர இச்சையை நிறைவேற்றிக் கொள்ள, தினம் தினம் துடித்த அவரை ஆண்டவர் காப்பாற்ற நினைத்தார். எந்த பெண்ணை நம்பி, அவள் சிநேகத்தின் மூலமாக, தன் இச்சையை நிறைவேற்றிக் கொள்ள நினைத்தாரோ, அவளையே பிசாசு அவரை அழிக்க பயன்படுத்தினான்.

**நியாயாதிபதிகள் 16:15-17 வசனங்களில் “அப்பொழுது அவள் அவனைப் பார்த்து: உன் இருதயம் என்னோடு இராதிருக்க, உன்னைச் சிநேகிக்கிறேன் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நீ இந்த மூன்றுவிசையும் என்னைப் பரியாசம்பண்ணினாய் அல்லவா, உன்னுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்று எனக்குச் சொல்லாமற்போனாயே என்று சொல்லி, இப்படி அவனைத் தினம்தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு, தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில்**

**பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான்.**". இங்கு இறுதியாக, எந்த தேவ ரகசியத்தை அவர் பாதுகாக்க வேண்டுமோ, அதை அற்ப இச்சைக்காக வெளிப்படுத்தினார். இது அவர் தேவ ரகசியத்தை மறைத்து வைக்க முயற்சி செய்தும், இறுதியில் முன்பு ஒரு பெண்ணின் சாதாரண அலட்டலை தாங்க முடியாமல் எப்படி விடுகதையை விடுவித்தாரோ, அதை போல் இங்கு இந்த பெண்ணின் அலட்டலை தாங்க முடியாமல், **சாகத்தக்கதாய் தன் ஆத்மாவில் விசனப்பட்டு** தேவ ரகசியத்தையே வெளிப்படுத்தினார். ஒருவேளை அவர் தன் வாழ்வில் கொடுக்கப்பட்டிருக்கும் தேவ கிருபையையும், தேவ உறவையும், இஸ்ரவேலின் நியாயாதிபதி என்னும் ஸ்தானத்தையும் நினைத்து பார்த்திருப்பாரனால், அவர் அந்த பெண்ணை விட்டு விலகிச் சென்றிருக்கலாம். ஆனால் தனக்கு கொடுக்கப்பட்ட கிருபையை, அற்ப இச்சைக்காக போக்கடித்துப் போட்டார். அதன் விளைவு அருமையான அவருடைய ஜீவனும் சில வெள்ளி காசுக்காக விற்கப்பட்டது.

**நியாயாதிபதிகள் 16:21 கூறுகிறது "பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக்கொண்டிருக்க வைத்தார்கள்.**". தேவ திட்டத்தின்படி அவருடைய பிறப்பில் முன் அறிவிக்கப்பட்ட காரியங்கள் நிறைவேறுவதற்கு பதிலாக, இங்கு அவர் வாழ்க்கை பரிதாபகரமான ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டது. **நியாயாதிபதிகள் 16:23-25 வசனங்கள் கூறுகிறது "பெலிஸ்தரின் பிரபுக்கள்: நம்முடைய பகைஞனாகிய சிம்சோனை நம்முடைய தேவன் நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனாகிய தாகோனுக்கு ஒரு பெரிய பலிசெலுத்தவும், சந்தோஷம் கொண்டாடவும் கூடிவந்தார்கள். ஜனங்கள் அவனைக் கண்டவுடனே: நம்முடைய தேசத்தைப் பாழாக்கி, நம்மில் அநேகரைக் கொன்றுபோட்ட நம்முடைய பகைஞனை நம்முடைய தேவன் நமது கையில் ஒப்புக்கொடுத்தார் என்றுசொல்லி, தங்கள் தேவனைப் புகழ்ந்தார்கள். இப்படி அவர்கள் மனமகிழ்ச்சியாயிருக் கும்போது: நமக்கு முன்பாக வேடிக்கைகாட்டும்படிக்கு, சிம்சோனைக்**

**கூட்டிக்கொண்டு வாருங்கள் என்றார்கள்; அப்பொழுது சிம்சோனைச் சிறைச்சாலையிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார்கள், அவர்களுக்கு முன்பாக வேடிக்கை காட்டினான்; அவனைத் தூண்களுக்கு நடுவே நிறுத்தினார்கள்.**“. இங்கு அவர் வாழ்வின் மிக பரிதாபகரமான சூழ்நிலை காணப்படுகிறது. பெலிஸ்தியர் தங்கள் நரகலான விக்கிரக தெய்வங்கள், தங்களை ரட்சித்தது என்று எண்ணி அவற்றை புகழவும், சிம்சோனை வேடிக்கையாகவும் நினைத்தனர்.

ஆனால் சிம்சோனுக்கு தெரியும் தன் தவற்றினால், பாவத்தினாலேயே, இங்கு இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது என்பது. இப்பொழுது அவர் தன் இருதயத்தில் தேவ கிருபையை எண்ணினார். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஆண்டவரை நோக்கி கூப்பிட்டால், ஆண்டவர் தனக்கு செவிக்கொடுப்பார் என்பதை அவர் உணர்ந்தார். ஆனால் அதே வேளையில், அவர் வேண்டின ஒரு காரியம், இனிமேலும் அவர் பூமியில் இந்த பாவ சரீரத்தோடு இப்பூமியில் வாழ விரும்பவில்லை. எனவே தன் மரணத்தின் தருவாயிலாவது தேவநோக்கத்தை நிறைவேற்ற எண்ணி, **“அந்த வீடு புருஷராலும் ஸ்திரீகளாலும் நிறைந்திருந்தது; அங்கே பெலிஸ்தரின் சகல பிரபுக்களும், வீட்டின்மேல் புருஷரும் ஸ்திரீகளுமாக ஏறக்குறைய மூவாயிரம்பேர், சிம்சோன் வேடிக்கை காட்டுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும்படிக்கு, இந்த ஒருவிசைமாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, பலப்படுத்தும் என்று சொல்லி, சிம்சோன் அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத்தூண்களில், ஒன்றைத் தன் வலதுகையினாலும், மற்றொன்றைத் தன் இடதுகையினாலும் பிடித்துக்கொண்டு, என் ஜீவன் பெலிஸ்தரோடே கூட மடியக்கடவது என்று சொல்லி, பலமாய்ச் சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள்மேலும் எல்லா ஜனங்கள்மேலும் விழுந்தது; இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள்.“ (நியாயாதிபதிகள் 16:27-30).** ஆம் அவர் உயிரோடு இருக்கையில், அவரால் கொல்லப்பட்டவர்களை பார்க்கிலும், அவர் மடியும்

பொழுது அவரால் கொல்லப்பட்டவர்கள் அதிகம் என்பது, உயிரோடு இருந்து செய்ய முடியாததை, தன் சரீர அழிவின் (மரணம்) மூலமாக செய்து முடித்தார். ஆனால் அவரைக் குறித்து தேவத்திட்டம் இதுவல்ல. அவர் நியாதிபதியாய் இருந்து இஸ்ரவேலை பெலிஸ்தியரின் கையில் இருந்து ரட்சிக்க வேண்டும் என்பதே ஆகும். ஆனால் அவருடைய சரீர இச்சைக்கேற்ற பாவங்கள், அவரை தேவனுக்காக செயல்பட முடியாமல் செய்தது. மிகுதியான கிருபையை பெற்றிருந்தும், அதை செயல்படுத்த முடியாமல், தன் மரணத்தை தானே தேடிக்கொண்டார். ஆண்டவர் இதையும் இறுதியாக, அவர் வாழ்க்கையில் அனுமதித்தார். இங்கு அருமையாக ஆண்டவர் சிம்சோனுக்கு, ஒரு திட்டத்தை வைத்திருந்தும், அதை அவர் வாழ்க்கையில் செயல்படுத்த தொடங்கியும், அதற்கு ஏற்ப தன் ஆவி ஆத்துமா மற்றும் சரீரத்தை அவர் பணிக்கான ஒப்புக்கொடாமல், தன் சரீர இச்சைக்கு இடம் கொடுத்து தேவ கிருபையை போக்கடித்தார்.

இன்றும் கூட ஆண்டவர் சிம்சோனை போல எத்தனையோ வாலிபர்களுக்கு தம்முடைய அனாதி தீர்மானத்தின்படி, இந்த கடைசி காலங்களில், தம்முடைய வல்லமையை, கிருபையை, அளவில்லாமல் அவர்கள் மேல் பொழிந்து, அவர்களை தேவனுக்கென பிரகாசிக்க செய்ய, ஆண்டவர் செயல்படுகிறதை, நாம் கண்கூடாக இன்று, அநேக ஊடகங்களின் வாயிலாக காணலாம். இப்படிப்பட்ட கிருபையைப் பெற்ற வாலிபர்கள், தங்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபையை, சரியான விதத்தில் பயன்படுத்துவார்களானால், நிச்சயமாக இந்த பதினோராம் மணி நேரத்தில், வேலையை துரிதமாய் முடிக்க வேண்டிய இத்தருணத்தில், ஆண்டவருக்காக ஒரு பெரிய அறுவடையை அவர்கள் அறுப்பார்கள். ஆனால் அதே நேரத்தில் பிசாசு, அன்று சிம்சோனை இடறப்பண்ணினது போல, இன்றும் அநேக கிருபை பெற்ற, தேவ ஊழியர்களின் சந்ததியில் வந்த வாலிபர்களை உலக மாயங்கள், இச்சைகள், கீழ்ப்படியாமை ஆகிய இவைகளுக்கு உள்ளாய் தள்ளி, அவர்கள் தேவனுக்கென செயலாற்ற முடியாதவாறு, மேலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையே அழித்துக் கொள்ளும் அளவிற்கு, அவர்கள் வாழ்வில் இடறல்களை கொண்டு வருகிறான்.

இதனால் இன்று அநேக வாலிபர்கள், ஆண்டவருக்காக எழும்பி இருந்தும், தேவன் நாமம் பரம்பி மகிமைப்பட முடியாமல் போகிறது. காரணம் அவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கிருபையை சரியாக பயன்படுத்தாமல்,

சிம்சோனை போல அதை போக்கடித்து போடுகின்றனர். எனவே இப்படிப்பட்ட வாலிபர்களுக்காய் நாம் ஒவ்வொருவரும், ஆண்டவரிடம் மன்றாட வேண்டும். அவர்கள் மூலமாக தேவ திட்டம் வெளிப்பட, அவர்களோடு இணைந்து செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒன்றையே ஆண்டவரும் எதிர்பார்க்கிறார். எனவே சிம்சோனை போல பரிதாபகரமாய் வாலிபர்களின் ஓட்டம் முடியாமல், அவர்கள் தேவனுக்காக எழும்பி பிரகாசிக்கும் ஒளி சுடர்களாய் காணப்பட, ஆண்டவர் தாமே கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலுயா.